Nallur Branch Library

Registered as a Newspaper பக்கங்கள்: 4 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 07 23-07-94 சனிக்கிழமை ஓசை 155

## குடிசன மதிப்பீடு ஆரம்பம் வடக்கு-கிழக்கில் இல்லை

வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் குடிசன மதிப்பீட்டு நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது. இரு மாதங்களில் இப்பணி பூர்த்தி செய்யப்படவுள்ளது. பத்து வருடங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படும் இந்த கணக்கெடுப்பு 1981-இல் இறுதியாக எடுக்கப்பட்டது. 1991 இல் வடக்கு-கிழக்கு போர் சூழ்நிலை காரணமாக இப்பணி மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலையில் இவ்வாரம் முதல் வடக்கு-கிழக்கு தவிர்ந்த இலங்கையின் ஏனைய இடங்களில் குடிசன கணக்கெடுப்பு ஆரம்பிக்கின்றது.

# அதிகாரப் பரவலாக்கம் செய்ய அரசியல்யாப்பை திருத்துவோம்

## பொதுஜன ஐக்கிய முன்னணி அறிவிப்பு

(கொழும்பு)

"இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக உண்மையான அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்த நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். இதன் பொருட்டு அரசியல் அமைப்பில் திருத்தத்தைக் கொண்டு வரவும், அதற்குச் சகல சமூகங்களின் ஒத்துழைப்பையும் பெற நாம் முயற்சிப்போம்." இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்ட 40 பக்கங்களைக் கொண்ட அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேலும், அவசரமானதும், அதி முக்கியம் வாய்ந்ததுமான பிரச்சினை இனப்பிரச்சினையே என நாம் கருதுகிறோம். இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் பொருளாதார. சமூக அபிவிருத்தியோ சாத்தியமில்லை.

உண்மையான அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப் படுத்துவதில் நாம் நம்பிக்கை கொண்டிருக்கிறோம். இனப் பிரச்சினைக்கும், அதிகாரப் பரவலாக்கலுக்கும் புவியியல், பொருளாதார. சமூக காரணிகளை ஒன்றிணைக்கும் தீர்வைக்காண முயலுவோம்.

மேலும் அதிகாரப் பரவலாக்கலை ஏற்படுத்த அரசியலமைப்பு திருத்தத்தைகொண்டுவர சகல சமூகங்களினதும் ஒத்துழைப்பு பெறப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் விஞ்ஞாபனத்தில் மேலும் பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை நீடிப்பதற்கும், சர்வசன வாக்கெடுப்பை நடத்துவதற்கும் பாராளுமன்றத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவை என்ற முறையை உடனடியாக

(4ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## ஒன்றுகூடவும்

வவுனியா இணைக்கப்பட்ட பல்கலைக்கழக கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களை எதிர்வரும் 25-ம் திகதி அன்று காலை 10 மணிக்கு நியூமாஸ்ரர் கல்வி நிலையத்தில் (எழிலகம் முன்பாக) ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## ஆதரவாளரிடையே மோதல் எதிரணி ஆதரவாளர் கைது

தங்காலையில், பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்களிடையே ஏற்பட்ட மோதலொன்றைத் தொடர்ந்து பத்து பொ. ஐ ஐ. முன்னணி ஆதரவாளர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த புதனன்று இச் சம்பவம் நடைபெற்றது.

நள்ளிரவு வேளையில் கத்தி, பொல்லுகளின் உதவியுடன் இவர்கள் மோதலில் ஈடுபட்டனர். இச் சம்பவத்தில் காயமடைந்த ஐ. தே. க. ஆதரவாளர் ஒருவர் தங்காலை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## வேட்பாளரை நிறுத்த நாலரை லட்சம் விலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தேர்தல் தொகுதியில் சென்ற பொதுத் தேர்தலில் ஈ.பி ஆர் எல் எவ் சார்பில் போட்டியிட்ட ஒருவர் இம்முறை போட்டியிடாமல் ஒதுங்கியுள்ளார்.

இதேவேளை ஈபி. டிபி உறுப்பினராக இருந்து பழுகாமம் பகுதியில் இராணுவத்தினருடன் பலமான அடாவடித்தனங்களில் ஈடுபட்ட காளிதாஸ் என்பவர் தலைமையில் சுயேட்சைக் குழுவை ஐக்கிய தேசியக் கட்சி நிறுத்தியுள்ளதாக தெரியவருகிறது. இவருக்கு நாலு லட்சம் ரூபா வரையில் இதற்காக விலை பேசப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

## தேர்தல் பிரசார உரைகளை ஒலிப்பதிவு செய்ய பணிப்பு

(கொழும்பு)

தேர்தல் பிரசார மேடைகளில் இடம்பெறும் உரைகள் ஒலிப்பதிவு செய்யப்பட வேண்டும் என சகல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் பொலிஸ் மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

தேர்தல் பிரசார கூட்டங்களின் போது யாருடைய பேச்சுக்களை ஒலிப்பதிவு செய்ய வேண்டும் என்பது தொடர்பான முழுமையான விபரங்களை விசேட தேர்தல் பொலிஸ்பிரிவு அறிவுறுத்தும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசார கூட்டத்திற்கு அனுமதி வழங்கும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் ஆணையாளருடன் கட்சிகள் நாளை சந்திப்பு

## இராஜினாமா செய்த அதிகாரிகள் மீண்டும் சேவைக்கு அழைப்பு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் நிரந்தர அல்லது தொண்டர்

சேவைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 25 ஆம் திகதி

ப்படுவர். பணியில் சேரவருகையில் சேவைசான்றிதழ் பொலிஸ் அனுமதி சான்றிதழ்

## பதவி நீக்கிய பொலிசாரை கடமைக்கு எடுக்காதீர்

### சுதந்திர தேர்தலுக்கு ஆபத்து

(கொழும்பு)

கொலைக்குற்றச்சாட்டுகள் தொடர்பாக வேலையில் இருந்து நிறுத்தம் செய்த பொலிஸ் உயர் அதிகாரி

கா ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கைகளை

## கட்சிகள் நாளை சந்திப்பு

(கொழும்பு)

பொதுத்தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்களின் தலைவர்களுடன் தேர்தல் ஆணையாளர் நாளை சந்திப்பொன்றை நடத்தவுள்ளார்.

கட்சிகளின் பொதுச் செயலாளர்களுடனும், சுயேட்சை குழுக்களின் தலைவர்களுடனும் இச்சந்திப்பு நடைபெற இருப்பதாகவும் இது தேர்தல் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் நடைபெறும் இரண்டாவது சந்திப்பு எனவும் தேர்தல் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

படையிலிருந்து ஓய்வுபெற்ற அல்லது இராஜினாமா செய்த அதிகாரிகளையும் ஏனைய தரத்தவர்களையும் மீண்டும் தொடக்கம் 29 ஆம் திகதி வரையில் இவர்கள் சம்பளம் ஒய்வூதியத் திட்ட பிரகாரம் பணிக்கு சேர்த்துக் கொள்ள என்பனவற்றை கொண்டு வருமாறு இராணுவத் தலைமையகம் கோரியுள்ளது

உட்பட பலர் மீண்டும் தேர்தல் கடமைகளுக்காக நிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பாக சுதந்திர தேர்தலுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக சுதந்திரக்கட்சி தலைவி சிறிமாவோ பண்டாரநாயக் முழுமையாக நிறுத்து தேர்தலின் போது மக்களை சுதந்திரமாக செயற்பட அனுமதிக்குமாறு அக் கடிதத்தின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## சுவரொட்டி கிழிக்கும் பொலிசாருக்கு சிரமம்

(கொழும்பு)

கொழும்பில் தேர்தல் சுவரொட்டிகளை அகற்றும் பொலிசாருக்கு புதிய சிக்கல் ஒன்று எழுந்துள்ளது. சுவரொட்டிகளை ஒட்டும் பசையுடன் ரியூப் லைட் துகள்களும் கலக்கப்பட்டு இருப்பதால் இவற்றை கிழித்தெறிவதில் பொலிசார் சிரமப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி சுவரொட்டிகளோடு, பதாகைகளையும் அகற்ற கூலிக்கு ஆட்களைபிடிப்பதன் மூலம் பொலிசார் பெரும்செலவினத்தை அனுபவிப்பதாகவும் தெரியவருகின்றது.

## அமைச்சர்களின் வாரிசுகள் தேர்தல் பிரசாரத்தில்

(கொழும்பு)

தென்னிலங்கை தேர்தல் பிரசார கூட்டங்களில் அமைச்சர்களின் பிள்ளைகளும் தங்களுடைய தந்தையர்களுக்காக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

கண்டி மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடும் காமினி திசாநாயக்கவிற்கு விருப்பு வாக்குகளை வழங்குமாறு அவரின் புதல்வன் நளின் திசநாயக்கா பிரசாரம்செய்து வருகிறார்.

அமைச்சர் சந்திரா கருணாரட்ணவின் மகன் சட்டத்தரணி துசான் கருணாரட்ணவும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

## போதிய பாதுகாப்பு இல்லை சந்திரிகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிறிலங்காவின் முக்கிய எதிரணித் தலைவர்களில் ஒருவரான மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா தனக்கு போதிய பாதுகாப்பு வழங்க அரசு தவறிவிட்டது என பகிரங்கமாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

எதிர்வரும் ஆகஸ்ட் 16-ம் திகதி பாராளுமன்றத்தேர்தல் நடைபெறவுள்ளது. இவ்வேளையில் தனது உயிருக்குபல வழிகளிலும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தனக்கு பூரண பாதுகாப்பு வழங்குமாறு அரசிடம் பல

(4ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் பொலிசாரை ஈடுபடுத்த வேண்டாம்

### பொ. ஐ. முன்னணி கோரிக்கை

(கொழும்பு)

தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் பொலிசாரை கடமையில் ஈடுபடுத்த வேண்டாம் என பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் தி. மு. ஜயரட்ண இது தொடர்பான கடிதம் ஒன்றை தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ளதாகவும். தென்கிழக்கு ஆசிய சேவையில் அமல் ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் பொலிசாருக்குப்பதிலாக இராணுவத்தினரை பயன்படுத்துமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

வாக்களிக்கும் போது பல மோசடிகளில் ஈடுபட பொலிசார் திட்டமிட்டுள்ளதாகவும், இதற்கு சில பொலிஸ் உயரதிகாரிகள் உடந்தையாக செயல்படுவதாகவும், இதே சமயம் இவர்கள் யார்? யார்?

(4ஆம் பக்கம் பார்க்க)

# போதுத் தேர்தலுக்குப்பின் வன்முறை; இரு பிரதான கட்சிகளும் சர்ச்சை

(கொழும்பு)

தேர்தல் முடிவுற்றதன் பின்னர் தென்பகுதியில் பெரும் வன்முறையொன்றை நடத்த திட்டமிட்டு வருவதாக வெளிவந்த செய்திகள் குறித்து இரு பிரதான கட்சிகளும் ஒன்றையொன்று குற்றம் சாட்டி வருகின்றன.

பெருமளவிலான குண்டர்களையும் வன்முறையாளர்களையும் பயன்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியில் இருந்து நீக்க பொதுஜன ஐக்கிய முன்னணி திட்டம் வகுத்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெலிமடவில் நடந்த தேர்தல் பிரசார கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மேற்படி கூற்றைக் கண்டித்து பொதுஜன ஐக்

(4ஆம் பககம் பார்க்க)

# தமிழ்க் குழுக்களின் மிரட்டலால் கொழும்பிலிருந்து தமிழர் வெளியேற்றம்

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தங்கியுள்ள தமிழர்கள் மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அச்சம் காரணமாக பலர் அங்கிருந்து வெளியேறி வடபகுதி நோக்கி வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் பல ஆயிரக் கணக்கான தமிழர்கள் குடும்பம் குடும்பமாகவும், தனிநபர்களாகவும் தனியார் விடுதிகளிலும் வாடகை வீடுகளிலும் தங்கியிருப்பது தெரிந்ததே..

இம்முறை நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலிற்கு இடம் பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியிருப்போர் அந்தந்த இடங்களிலேயே வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இவர்களது வாக்குகளை பெற்றுக்கொள்ளும்முயற்சி

(4ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் பொலிசார் எவ்வகையிலும் தலையிடார்

### பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் பொலிசார் எந்த வகையிலும் தலையிட மாட்டார்கள். பொலிஸ்உத்தியோகத்தர் யாராவது அரசியல் நடவடிக்கைகளில்ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தெருக்களிலும் பொது இடங்களிலும் தேர்தல் பிரசார சுவரொட்டிகளை ஒட்டுதல் சட்டத்திற்கு விரோதமானதாகும். அவற்றை அகற்றப் பொலிசார் நடவடிக்கைஎடுப்பர்.

வீடுவீடாகச்சென்று வாக்கு வேட்டையில்ஈடுபடுவது சட்ட விரோதமாகும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## தென்னிலங்கைத் தேர்தல்; ஒரு வாரத்தில் ஏழு கொலை

(கொழும்பு)

சிறிலங்காவில் கடந்த 11-ம் திகதிக்குப் பின்னரான ஒரு வார காலத்தில் ஏழு அரசியல் கொலைகள் இடம்பெற்றுள்ளதாக சிறிலங்கா பொலிஸ் மா அதிபர் பிராங்டி சில்வா தெரிவித்துள்ளார்.

இம்முறை தேர்தல் காலத்தில் அதிகளவு வன்முறைகள் இடம் பெறலாம் என சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பேரூந்து உருவமைப்பு தொழிற்சாலை தீக்கிரை

(கொழும்பு)

எக்கலவிலுள்ள பாரிய பஸ் உருவமைப்புச்செய்யும் தொழிற்சாலையொன்று நேற்று முழுமையாகஎரிந்து சாம்பராகியதுஎன அறிவிக்கப்பட்டது.

இங்கு மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்பட்ட பல பஸ்களின் அடிச்சட்டங்கள் நிறுத்திவைக்கப் பட்டிருந்ததாகவும் இவற்றுக்கு உருவமைப்புச் செய்யப்பட்டுக் கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத் தீயினால் பலகோடி ரூபாக்கள் நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# வரி விளம்பரம்


## ஜோதிடம்

ஜாதகம் எழுத, விவாகப் பொருத்தம் பார்க்க, அதிர்ஷ்டகரமான பெயரமைக்க, உங்கள் எதிர்காலப்பலனறிய - V. A.சிவராசா சோதிடர் (வேலணை)- 152 B அரசடி றோட் கந்தர்மடம், யாழ்ப்பாணம். (8892)

## மிருதங்கம்

கைவசம் புதிய மிருதங்கங்கள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு.சாதம் போடுவதற்கு 100 ரூபா மட்டும். கோவிந்தபிள்ளை விஜயகுமார் 192/1, நாவலர் றோட் பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (8854)

## றெனி மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களை சரியாகப் பரிசோதித்து உடன் கண்ணாடிவழங்கப்படும். இல. 288 நாவலர் வீதி,ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (8864)

## தவறிவிட்டது

15-7-94 அன்று மட்டுவிலில் இருந்து யாழ் - செல்லும் வழியில், சிங்கர் கத்திரிக்கோல் அடங்கிய பார்சல் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள், யாழ். அஸ்பத்திரி முன்பாக உள்ள கௌரி தொழிலகத்திலோ அல்லது -உஷா கம்பனியிலோ - சிங்கர் கம்பனி சாவகச்சேரியில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும் (சி-9957)

## தவறிவிட்டது

19-07-94 அன்று எழுதுமட்டுவாளிற்கும் மிருசுவிலிற்கும் இடையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் எழிலழகன் என்பவருடைய முக்கியமான புத்தகங்கள் அடங்கிய Bag [பை] தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பொ. இராஜேஸ்வரன், ஆசிரியபீடம் ஈழநாதம் முகவரியில் தொடர்பு கொள்ளவும்; (சி-9969)

## தீர்த்த உற்சவம்

நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலய தீர்த்த உற்சவம் இன்று நடைபெறுகின்றது. நாளை வைரவர் சாந்தியும் இடம் பெறும்.

உற்சவ நிகழ்ச்சிகளாக, இறைவழிபாட்டில் சிறந்தது


## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
## நல்லூர் கந்தசுவாமி கோவில் 1994 ஆம் ஆண்டு
## மகோற்சவகால தற்காலிக கடைகள்

01. நல்லூர் இந்துவிடுதிக்கு அருகாமையிலும்
02. ஆலயம் முன்பாக பருத்தித்துறை வீதியிலும்
03. கோவில் வீதியில் ஆலயத்துக்கு வடக்குப் புறமாகவும்
04 பண்டாரமாளிகை வளவில் மாநகரசபை அலுவலகத்திற்கு மேற்கு பக்கமாகவும்

நிலம் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 03-08-94ஆம் திகதி புதன் கிழமை நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 100/-ஐயும் மீளளிக்கப்படக் கூடிய பிணையாக ரூபா 500/-ஐயும் செலுத்துவதன் பேரில் 02-08-94ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை மாநகராட்சி மன்றத்தினால் வழங்கப்படும் கேள்விப் படிவங்களில் (இணைப்பிரதிகளில்) கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் 03-08-94 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்குப் பிந்தாமல் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் சேர்க்கப்படல் வேண்டும்.

கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். உரிய வரைபடத்தையும் பார்வையிட முடியும்.


குறிப்பு:- மேற்படி சந்தைப் பகுதியில் அனுமதிக்கப் படும் கடைகள் தவிர முன்கூட்டிய அனுமதி பெற்றிராத எந்த வியாபாரமும் திருவிழாக்காலத்தில் செய்வதற்கு அனுமதிக்கப் படமாட்டாது.

**வே. பொ. பாலசிங்கம்**

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
21-07-1994

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.
(சி-9970)

## 3 ஆம் ஆண்டு நினைவாக



தாயின் அரவணைப்பில்:
01-05-1929

ஆண்டவனின் அரவணைப்பில்:
27-07-1991

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



தமிழனாக
23-10-1965

தமிழுக்காக
23-07-1989

செல்வன்
**கந்தையா வேலாயுதகுமாரர் (தம்பி)**
(நாட்டுப்பற்றாளர்)

அன்னை மேனி எங்கும் அந்நிய
பதிவுகள் பாதம் பதித்த வேளை
தாங்கிய கொள்கை சரிந்திடாக் காத்தாய்
தாயகம் மீட்டிட இன்னுயிர் ஈந்தாய்
விடியும் வேளை தெரியுது இங்கே
எழுந்தோடி வாருமண்ணா!

தம்பி வீதி,
உடையார் வளவு,
சுன்னாகம். (8838)

- அப்பா
அன்புத் தங்கைகள்.

## 3 ஆம் ஆண்டு நினைவாக



பிறப்பு:
17-12-1972

வீரச்சாவு:
23-07-1991

**வீரவேங்கை குரு**
**வாமதேவன் விக்கினேஸ்வரன் (பாபு)**
(தங்கோடை காரைநகர்)

தாயின் மடியில் மலர்ந்து
தமிழீழ மண்ணில் குருவாய் உதித்து
மண்ணிற்காய் மரணித்த வீரனே
நினது இலட்சிய தாகம் மலரட்டும்
இனிய தமிழீழம் பூக்கட்டும்

எமது இல்லத்தில் (இன்று) 23 - 07 - 1994 சனிக்கிழமை நடைபெறவிருக்கும் அஞ்சலி நிகழ்வில் சக போராளிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு

## நினைவு கூருகின்றோம்...

### 23-07-1994...

1983-ம் ஆண்டு இதேதினத்தில் யாழ் - திருநெல்வேலியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித்தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**லெப். செல்லக்கிளி அம்மான்** (சதாசிவம் செல்வநாயகம் - திருநெல்வேலி கிழக்கு - யாழ்)

1989-ம் ஆண்டு கோண்டாவிலில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**கந்தையா வேலாயுதகுமார்** (உடையார்வளவு - சுன்னாகம்)

கோண்டாவில் ரயில் நிலையத்திற்குச் சமீபமாக தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான யாழ் - மத்தியகல்லூரி வர்த்தகப் பிரிவு மாணவனான,

**மகாலிங்கம் மகேஸ்வரன்** (நீர்வேலி)

சண்டிலிப்பாயில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1990-ம் ஆண்டு வீரச்சாவெய்திய,

**தசரதன்** ( - - - திருமலை)

யாழ் - காங்கேசன்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**பிரசன்னா** (புதியாக்குட்டி தயாபரன் - புத்தூர் கிழக்கு - யாழ்)

யாழ் - கோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**அமுது** (ஐயாசாமி கிருஷ்ணமூர்த்தி- சுப்பர்மடம்-பருத்தித்துறை)

முரசுமோட்டையில் - 2-ம் கட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின்போது வீரச்சாவெய்திய,

**சரவணன்** (பாலி போடி சசிகரன் - கோரக்கல்லிமடு - மட்டு)

**மனோஜ்** (சின்னத்தம்பி தயாபரன் - கிரான்சி, பூநகரி - மன்னார்)

**வெஸ்லி** (மகாலிங்கம் புவனேந்திரன்- கற்குழி சாவகச்சேரி - யாழ்)

**ரேணு** (சாம்பசிவம் கந்தசாமி - )

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மயிலம்பாவெளியைச் சேர்ந்த தமிழ்ப்பெண்.

வவுனியா - செட்டிக்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் சடலமாக மீட்கப்பட்ட தமிழிளைஞன்.

1991-ம் ஆண்டு ஆனையிறவில் மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வெ. நடவடிக்கையின் போது புல்லாவெளியிலிருந்து ஆனையிறவை நோக்கி முன்னேறமுயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**மனோ** (திபாகரராசா மகேந்திரம் பனம்பாடு அக்கரைப்பற்று - அம்பாறை)

**2-ம் லெப். ஜெயா** (செல்லையா நடராசா-காயங்காடு, செங்கலடி-மட்டு)

**கைலன்** (இராமலிங்கம் இராஜி களுவாஞ்சிக்குடி-மட்டு)

**லெப்-சிவா** (இராசப்பு அன்ரனி அமலநேசன்-நிலாவெளி-திருமலை)

**கப்டன் அரசன்** (சோமசேகரம் போகேந்திரன்-அரியாலை - யாழ்)

நாளை வைரவர் சாந்தியும் இடம் பெறும்.

உற்சவ நிகழ்ச்சிகளாக, இறைவழிபாட்டில் சிறந்தது பக்தியா - பயமா என்ற பட்டி மன்றமும், நவாலி கலைமணி நாடக மன்றத்தின் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறும்

## அமைச்சர் பதவி

(கொழும்பு)

வடமேல்மாகாணசபையின் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த இருவருக்கு மாகாண அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளது.

ஐ.தே.கவைச் சேர்ந்த இரு உறுப்பினர் நேற்று வடமேல் மாகாண ஆளுநர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் முன்னிலையில்சத்தியப்பிரமாணம்செய்து கொண்டார்கள்.

## வங்கியாளர்க்கு ஆங்கில பயிற்சி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் மக்கள் வங்கித் தலைமையகத்தின் வேண்டுகோளுக்கிணங்க விசேட ஆங்கிலக் கற்கை நெறி ஒன்று யாழ். மக்கள் வங்கிக் கிளைகளில் பணியாற்றுவோருக்காக நடாத்தப்படவுள்ளது.

தொடர்ந்து ஐந்து மாதங்கள சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பல்கலைக் கழகத்தில் இடம்பெறவுள்ள இக்கற்கைநெறியின்ஆரம்ப வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு புவியியற் துறை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

## கடற்படைக்கு 'ரணவிஜய'

சிறிலங்கா கடற்படையினரின் இரண்டாவது தரையிறக்கும் கப்பல் 'ரணவிஜய' இணைத்துக்கொள்ளப்பட்டது. இது 129 மில்லியன் செலவில் கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்தால் கட்டப்பட்டுள்ளது.



## அமரர் நாகமணி இராசையா

திதி:- 23-07-1994

எம்மை விட்டு மூன்று ஆண்டுகள் மறைந்தாலும் உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்.

கிருபாகரன் சாலை, கல்வியங்காடு.

அன்புமனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

(8901)

இனிய தமிழீழம் பூக்கட்டும்

எமது இல்லத்தில் (இன்று) 23 - 07 - 1994 சனிக்கிழமை நடைபெறவிருக்கும் அஞ்சலி நிகழ்வில் சக போராளிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிதம் உன் நினைவோடு

- குடும்பத்தினர்

தற்போதைய முகவரி:-
மடத்தடி ஒழுங்கை,
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.

(8874)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
14 — 04 — 1971



வீரச்சாவு
23 — 07 — 1990

## வீரவேங்கை பிரசன்னா
## (புதியாக்குட்டி தயாபரன்)


ஓ பிரசன்னா! நீ வீரத்துடன் போராடும் வேளையில் எதிரியின் குண்டு உன் மார்பினை துளைத்ததே மகிழ்வுடன் வீரச்சாவினை அணைத்தாய் மண்ணிற்காய். ஓ மாவீரனே! உன் உடல்தான் எரிந்துபோனது உணர்வுகள் எரியவில்லை.

தயாபரன் வீதி,
ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர்.

அப்பா, அம்மா,
சகோதரர்கள்,
உறவினர்கள்.

(8903)

## 3 ஆம் ஆண்டு நினைவாக



## கப்டன் அரசன்
## (சோமசேகரம் யோகேந்திரன்)

பிறப்பு: 27 - 7 - 1971

வீரச்சாவு: 23 - 7 - 1991

விடுதலை வேட்கையுடன்
வீரத்துடன் சென்றவனே
அந்நியன் குண்டை தமிழ்க்காய்
அன்புடன் ஏற்றவனே
அண்ணன் வழியில்
அணி திரண்ட வேங்கையே
உனது தாகம் தீரும் வரை
உறுதியது தளராது.

(8897)

- குடும்பத்தவர்

**லெப்-சிவா** (இராசப் / அன்ரனி அமலநேசன்-நிலாவெளி-திருமலை)

**கப்டன் அரசன்** (சோமசேகரம் யோகேந்திரன்-அரியாலை - யாழ்)

**கப்டன் பாண்டியன்-புறுஸ்லி** (துரைசிங்கம் கிருஷ்ணகுமார்-வடலியடைப்பு-பண்டத்தரிப்பு)

**அறிவொளி** (சிறிபத்மநாதன் சத்தியசீலன்-விதானையார் வீதி, சுண்டுக்குளி-யாழ்)

**பட்சன்** (சீனிபர் உதயராசா-புன்னாலைக்கட்டுவன் தெற்கு-யாழ்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது படுகொலை செய்யப்பட்ட கூலித்தொழிலாளியான செங்கலடி-2ஐச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

[சி-9960]

## அந்தியேட்டி அறிவித்தல்

## திருமதி தம்பையா நேசம்மா

24-06-94 அன்று அமரத்துவமடைந்த நேசம்மாவின் அந்தியேட்டிக் கிரியைகள் 23-07 94 இன்று சனிக்கிழமை கொழும்பிலுள்ள அவருடைய மகளின் இல்லத்தில் நடைபெறுமென்பதை அறியத்தருகிறோம்.

அன்னார் அமரர் தம்பையாவின் அன்பு மனைவியும், திருமதி புவனேஸ்வரி, செல்வவினாயகம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பாலேந்திரா (சட்டத்தரணி), தவலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும், அமரர் ''சிந்தனைச் சிற்பி'' சின்னத்துரையின் (வீலா நிறுவனங்களின் ஸ்தாபகர்) அன்பு சகோதரியும், ராஜ்மோகன், கீதாமாலினி, சிந்துஜா, உதயன், சதீஸ் ஆகியோரின் அருமைப் பேத்தியுமாவார்-

ஓம் சாந்தி

தகவல்
மக்கள்

62, பண்டாரநாயக்க மாவத்தை,
கொழும்பு - 12.

(8889)

Fallar Branch Library

### சிந்தனைக்கு..

ஒவ்வொரு தாக்குதலிலும் ஒங்குவது சுதந்திரமே.
- ரொபர்ட் பர்ன்ஸ்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 23-07-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

# புதிய அத்தியாயத்தின் தொடக்கமான யூலை-23

1983 யூலை- 23, இலங்கையின் இராணுவ, அரசியல் வரலாற்றில் மறைக்கவோ, மறுக்கவோ முடியாத திருப்பத்தை ஏற்படுத்திய நாள். அன்றுதான் தமிழீழப் பிரதேசத்தில் சிங்கள இராணுவத்தின் நடமாட்டத்திற்கு முதல் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

அன்று நள்ளிரவுதான் விடுதலைப் புலிகள் திருநெல்வேலியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்ணிவெடித் தாக்குதலை நடத்தினர். 13 சிங்களப்படையினர் கொல்லப்பட்டஇத்தாக்குதலின், எதிரொலி யாழ். குடாநாட்டு மக்களுக்கு மட்டும் அதிர்ச்சியைக் கொடுக்கவில்லை. சிறிலங்கா ஆட்சிபீடத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

பதினொரு வருடங்களுக்கு முன், விடுதலைப்புலிகள் நடத்திய இத் தாக்குதலே இலங்கையின் இன்றைய இராணுவ அரசியல் போக்கைத் தீர்மானித்ததென்றால் மிகையில்லை. இத்தாக்குதலானது அரசியல் ரீதியாக உலகிற்கும் பறை சாற்றியது இதுதான், தமிழ் இனம் தனது விடுதலைக்காக ஆயுத ரீதியாகப் போராடத் தொடங்கிவிட்டது என்பதுவே அதுவாகும்.

இதனை ஒருவகையில் 1977ஆம் ஆண்டு வெறுங்கையுடன் கைகட்டி நின்ற தமிழ்த் தலைவர்களைப் பார்த்து 'போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்' என முழங்கிய அப்போதைய பிரதமரும், பின்னர் ஜனாதிபதியுமான ஜே ஆர். ஜெயவர்த்தனாவிற்கு, விடுதலைப்புலிகள் இயக்கம் அளித்த பதில் என்றும் கொள்ளலாம்.

இத்தாக்குதலானது மேலும் பலவற்றை சிறிலங்கா ...

# அஷ்ரப், செல்லச்சாமியுடன் ஒப்பந்தம் ஏன் செய்யப்பட்டது?

## காரணம் கூறுகிறார் தி. மு. ஜயரட்ண

(கொழும்பு)

இனங்களுக்கு இடையே ஒற்றுமை மற்றும் பரஸ்பர புரிந்துணர்வு ஒற்றுமை கொண்ட ஓர் நாட்டை கட்டியெழுப்புவது இன்று அவசியமானது எனவே சிறுபான்மை மக்களின் நம்பிக்கை உறுதிப்படுத்தப்படுவதே ஒன்றிணைந்த சிறிலங்காவுக்கு மிகவும் அவசியமானது என பொது ஜன ஐக்கிய முன்னணியின் பொது செயலாளர் தி. மு. ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஒற்றை ஆட்சியை கட்டியெழுப்புவதற்கு அடிப்படை அம்சமாக இனங்களுக்கு இடையே புரிந்துணர்வு ஏற்படும் தேர்தல் நடவடிக்கையொன்றை ஏற்படுத்துவது தொடர்பாகவே பொது ஜனஐக்கிய முன்னணி சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப், எம். எஸ். செல்லச்சாமியுடன் நிபந்தனை உடன் கூடிய கூட்டு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இருவருடன் மேற்கொண்ட ஒப்பந்தம் தனித்தனியே மேற்கொள்ளப்பட்டதாகவும் தான் அவ் ஒப்பந்தத்தை தயாரித்து அதற்கு கையெழுத்து இட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வாக்குச்சீட்டு அச்சிடும் அச்சகத்திற்கு பொலிசார் பாதுகாப்பு

எதிர்வரும் பொதுத்தேர்தலிற்கான வாக்குச்சீட்டுகள் அச்சிடப்படும் சிறிலங்கா அரச அச்சகத்திற்கு பாதுகாப்பு வழங்க 100 பொலிசாரைக் கொண்ட பொலிஸ் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கான பாதுகாப்பை வழங்கவென மேலும் விசேட அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர் அத்துடன் வாக்குச்சீட்டுக்கள் அச்சடிக்கும்வேலை எதிர்வரும் 31-ம் திகதியுடன் முடிவடைவதாக தெரியவருகிறது.

# ஊர்வலம்சென்றபொலிஸ் சகாவை அழைத்து தாக்கு

(கொழும்பு)

கட்சி ஊர்வலத்தில் சிவில் உடையில் சென்ற பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் அவ்வேளை சடமையில் ஈடுபட்டு இருந்த பொலிசார்மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

களுத்துறையில் ஊர்வலம் மணிக்கூட்டுசந்தியருகே சென்று கொண்டு இருக்கும் போது மணிக்கூட்டுக்கு அருகே கடமையில் ஈடுபட்டுகொண்டு இருந்த பொலிசாரை இவர் அழைத்து அவர்மீது தாக்குதல் நடத்தியதாகவும் கடமையில் இருந்தவர் காயமடைந்த நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஆகஸ்ட் 6 இல் பரீட்சை

(கொழும்பு)

இலங்கை விவசாய சேவையின் இரண்டாம் வகுப்பு இரண்டாந்தர பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை ஆகஸ்ட் மாதம் 6ஆம் திகதி நடத்தப்படுமென விவசாய ஆராய்ச்சி துறை அமைச்சின் செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

பரீட்சையின் முன் ஒருவார காலம் வரை பரீட்சை அனுமதி அட்டைகள் கிடைக்காத பரீட்சார்த்திகள், பரீட்சை ஆணையாளரிடம் தொடர்பு கொண்டு அனுமதி அட்டைகளைப் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# வடக்கு - கிழக்கு இணைப்பு ஈழத்தின் அத்திவாரம்

## ரூபவாஹினியில் தினேஷ் குணவர்தனா உரை

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் பூர்வாங்க பகுதியாக்கப்பட்டு அந்த மாகாணங்கள் தமிழ் மக்களுக்கு இன்று வழங்கப்பட்டுவிட்டது. அப்பகுதியில் சிங்கள மக்கள் அச்சுறுத்தலின் கீழ் வாழ்வது மட்டும் அல்ல அங்குள்ள சிங்கள கிராமமக்கள் கூட அச்சுறுத்தலின் கீழ் வாழ்ந்து வருகின்றனர் என மக்கள் விடுதலை முன்னணி தலைவர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

ரூபவாஹினியில் தேர்தல் பிரச்சார பேச்சின் போது இக் கருத்தை அவர் தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் வடக்கு- கிழக்கு தற்காலிகமாக இணைப்பதாக கூறி இன்று ஆறு அரை ஆண்டுகளுக்கு மேலாக அவை இணைக்கப்பட்டுள்ளது. இது அவர்களின் பூர்வாங்க பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது எனவே இது நாட்டை பிரித்து கொடுப்பதற்கு எடுக்கப்பட்ட ஆரம்ப நடவடிக்கை என்றே எடுத்துக் கொள்ள முடியும்.

வடக்கு-கிழக்கு இணைப்பு என்பது ஈழம் அரசாங்கம் ஒன்றின் அத்திவாரம் என்பதை மக்கள் உணர வேண்டும் என்றும் எனவே தொடர்ந்து வடக்கு கிழக்கு இணைந்து இருப்பது என்பது எதிர் காலத்தில் இப்பகுதி சிங்களவர்களுக்கு கிடைக்காமல் போகும் என்பதே என அவர் தெரிவித்துள்ளார்.

எனவே நீங்கள் முகம் கொடுக்கும் இத் தேர்தல் உங்கள் சுவர்ண பூமியை காக்கும் தேர்தல் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் என்றும் எனவே எமது உரிமையை நாம் பாதுகாக்கவேண்டும் என்றும் ஆகவே தமது கட்சிக்கு வாக்களிக்க வேண்டுமென்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# உண்டபின் நழுவி விடும் நபர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

கொழும்பிலுள்ள பிரபல ஹோட்டல்களில் தங்கி சிறந்தரக உணவு வகைகளை அருந்தி விட்டு பணம் கொடாது கம்பி நீட்டி விடும் இலங்கையரான பிரிட்டிஷ் பிரஜை ஒருவரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

கடைசியாக கொள்ளுப்பிட்டியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் 2,35,000 ரூபாவுக்கு கணக்கு வைத்து விட்டு தப்பிச்செல்ல முயன்றபோது இவர் பொலிசாரிடம் அகப்பட்டார்.

# பொலிஸ் நிலையங்களில் தேர்தல் பிரிவுகள்

(கொழும்பு)

சகல பொலிஸ் நிலையங்களில் உடனடியாக ''பொலிஸ் தேர்தல் பிரிவு'' ஒன்றை ஏற்படுத்துமாறு தேர்தலுக்கான பொலிஸ் அத்தியட்சகர் இக்னேசியஸ் கனகரட்ணம் உத்தரவிட்டுள்ளார்.

அடுத்த மாதம் பதினான்காம் திகதிக்கு முன்னர் இந் நடவடிக்கை முழுமை பெற வேண்டும் என்றும் இது தொடர்பான முழு தகவலும் உடனுக்கு உடன் பொலிஸ் தலைமை காரியாலயத்தில் அமைந்த பொலிஸ் தேர்தல் பிரிவு தலைமை காரியாலயத்திற்கு தகவல் வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# அரச ஊழியர்களுக்கு பாதுகாப்பு வேண்டும்

## தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை

(கொழும்பு)

தேர்தல் கடமையில் ஈடுபடும் சகல அரசாங்க உத்தியோகஸ்தர்களின் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட வேண்டும் என அரசாங்க சேவையாளர் தொழில் சம்மேளனம் தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தேர்தல் கடமையில் ஈடுபடும் உத்தியோகஸ்தர் தேர்தல் கடமையில் முடிந்த பின்னர் அவர்கள் உரிய இடத்திற்கு வரும் வரை பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என தொழில் சம்மேளனத்தை சேர்ந்தவர்கள் தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அரசாங்க சேவை தொழில் சம்மேளனத்தலைவர் தேர்தல் ஆணையாளர்களுக்கு இடையே நடைபெற்ற சந்திப்பில் இதுதொடர்பாக கருத்து பரிமாறப் பட்டது.

தேர்தலின் பின்னர் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும கலவரத்தின் போது அரசாங்க ஊழியர்களுக்கு முழுமையான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என வற்புறுத்தப்பட்டதாக தெரிய வருகின்றது.

# மூன்றில் இரண்டு பலம் தேவை என்கிறார் பீரிஸ்

(கொழும்பு)

அரசியல் அமைப்பில் மாற்றத்தை கொண்டு வருவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படுவதாகவும் எனவே இம்முறை தமது கட்சிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் ஆட்சி அமைக்க உதவுமாறு பொது ஜன ஐக்கிய முன்னணியின் முக்கியஸ்தரான பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தமது கட்சி ஆட்சியை கைப்பற்றியதும் முதலில் அரசியல் அமைப்பு திட்டத்தை மாற்றி பாராளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்கக் ... லின் சகல உரிமைகளை ஜனநாயக ரீதியில் அனுபவிக்க ஏற்பாடு செய்யப்படும் எனத்தாம் கூறியதாகவும் பீரிஸ் கூறினார் பிரச்சினைக்கான தீர்வு விரிவான பேச்சுவார்த்தை மூலம் நடைபெற வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# முதல்படிவம் பெறலாம்

1993 ஆம் ஆண்டில் க. பொ. த.(உ / தர) பரீட்சைக்குத் தோற்றியோரில் பல்கலைக்கழக அனுமதிக்காக முதல்படிவம் அனுப்புவோர் ...

இத்தாக்குதலானது மேலும் பலவற்றை சிறிலங்காவிற்கும், உலகத்திற்கும் தெளிவாகவே பறை சாற்றியது. இதில் ஒன்று காலம் காலமாக சிங்களப் பேரினவாதிகளிடம் அடிவாங்கிக் கொண்டிருந்தது போல் இனியும் தமிழ் இனம் தொடர்ந்து இருக்காது அதாவது குட்டக் குட்டக் குனியப் போவதில்லை என்பது ஒன்று. தமிழ் மக்கள் திருப்பி அடிக்கத் தயாராகிவிட்டார்கள் என்பதே அதுவாகும்.

அடுத்ததாக, தமிழர் தமது விடுதலைக்காக ஆயுதம் தூக்கிவிட்டார்கள், இனி மேடைப் பேச்சு அரசியலுக்கோ அன்றிப் பாராளுமன்ற அரசியலுக்கோ அப்பாற்பட்டதாகவே விடுதலைப் போராட்டம் இருக்கும் என்பதாகும், அதாவது சாத்வீகப் போராட்டத்திற்கு முடிவு வந்துவிட்டது. சிங்களப் பேரினவாதத்திடம் சாத்வீகமான முறையில் எதையும் கேட்டுப் பெற்றுவிட முடியாது. எமது உரிமையை ஆயுதம் மூலம் நாமே பெற்றுக் கொள்ள தீர்மானித்து விட்டோம் என்ற அறிப்பாகும்.

இதேசமயம் இத்தாக்குதல் சிறிலங்கா அரசிற்கு மட்டும் எச்சரிக்கையாக அமையவில்லை. தமிழரிடம் தேசிய இன விடுதலை குறித்து ஒரு விழிப்புணர்ச்சியையே ஏற்படுத்தியது. சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராக தமிழ் மக்களினாலும் திருப்பி அடிக்க முடியும் என்று காட்டியது. தமிழ் இளைஞர்கள் மத்தியில் தமிழ் மக்களின் விடுதலை குறித்தும், ஆயுதப் போராட்டம் குறித்தும் ஒரு நம்பிக்கையையும், உறுதிப்பாட்டையும் ஏற்படுத்தியது.

மறுவளமாக சிங்களப் பேரினவாத அரசோ தனது கோழைத்தனத்தையும், காடைத்தனத்தையுமே காட்டியது. வெறுங்கையுடன் நின்றவர்களைப் பார்த்து போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம் எனக் கூறியவர்கள் ஆயுத ரீதியாகத் தமிழர்கள் பேச முற்பட்ட போது அப்பாவித் தமிழர்கள் மீது இனப் படுகொலைகளைக் கட்டவிழ்த்து விட்டார்கள்.

இந்தவகையில் தமிழரின் தேசிய எழுச்சியையும், விடுதலைப் போராட்டத்திற்குப் புதிய பரிணாமத்தையும் கொடுத்துவிட்ட யூலை 23, மறுபுறத்தில் தமிழ்மக்களிற்கு துயரத்தையும் கொடுத்ததாயினும் அதன் ஒட்டு மொத்தமான விளைவு சிங்களப் பேரினவாதம் இனிமேலும் தமிழரை அடிமையாக எண்ணிவிட முடியாது என்பதை தெளிவாகவே உணர்த்தியது. இதனைச் சிறப்பாகக் கூறுவதானால் இலங்கை அரசியலில் ஒரு புதிய அத்தியாயத்தையே திறந்துவிட்டதெனலாம்.

போது இக் கருத்தை

பதை மக்கள் உணர வேண்

துள்ளார்.

# பொலிசாரை அழைத்து ரணில் தேர்தல் பிரசாரம்

## ஐ.தே.க ஆட்சிவந்தால் சலுகை கிடைக்குமாம்

பொலிசாருடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் அவசர மகாநாடு நேற்று முன் தினம் கிருலப்பனை பொலிஸ் மைதானத்தில் நடைபெற்றுள்ளது.

இம் மகாநாட்டிற்கு பொலிஸ் தேர்தல் பொறுப்பதிகாரி இக்னேசியஸ் கனகரட்ணம் தலைமை வகித்தார் என்றும் இதில் பிரதமர் பொலிஸாருக்கு எதிர் காலத்தில் பல சலுகைகள் வழங்கப்பட இருப்பதாகவும் எனவே தொடர்ந்து இந்த கட்சியின் ஆட்சி நிலவுவதன் மூலம் இச் சலுகைகளை பொலிஸார் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

உத்தியோக பற்றற்ற நிலையில் இம் மகாநாடு நடைபெற்றதாகவும் இது ஓர் தேர்தல் பிரசாரம் போன்றே நடைபெற்றதாகவும் பொலிஸ் வட்டாரத்தில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடத்திச் செல்லப்பட்ட 11 ஐ.நா.படை விடுதலை

(மொகடிசு)

சோமாலியத் தலைநகர் மொகடிசுவில் கடத்திச் செல்லப்பட்ட 11 ஐ நா சமாதானப்படையினர் விடுதலை செய்யப்பட்டிருப்பதுடன் மற்றும் இருவரின் சடலங்கள் ஐ நா அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன

இதனிடையே சோமாலியாவில் ஐ நா. பிரசன்னத்தை நீடிப்பதா? என்பது குறித்து பாதுகாப்பு சபை எதிர்வரும் செப்டம்பரில் தீர்மானிக்கும்

## அரபு நாடுகளுடன் நட்புக்கு சதாம் விருப்பு

(பக்தாத்)

ஈராக் அரசாங்கத்துடன் அதன் எதிரிகளான அரபு நாடுகள் ஒரு உடன்பாட்டுக்கு வரவிரும்பும் பட்சத்தில் அந்த நாடுகளுடன் தமது நாடு சமாதானத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் என ஈராக் ஜனாதிபதி சதாம்ஹுசேய்ன் கூறியுள்ளார்.

ஈராக்குடன் நல்லிணக்கத்துக்கு வரும் நாடு முன்னர் அதன் எதிரியாக இருந்திருந்தாலும் கூட அதனை மறப்பதற்கு தயாராக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

அவர் இவ்வாறு அழைப்பு விடுத்திருப்பது குவைத், சிரியா, சவூதி ஆகிய நாடுகளைக் கருத்திற் கொண்டே என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## அமெரிக்க படையில் 16 இலட்சம் பேர்

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் படை வீரர்களாக இப்போது மொத்தம் 16 லட்சம் பேர் சேவை புரிவதாக அறிவித்துள்ளது. 291,000 அமெரிக்கப் படையினர் வெளிநாடுகளில் உள்ளனர். 190,000 பேர் போர் கப்பல்களில் சேவை புரிகின்றனர்.

563,555 பேர் இராணுவத்திலும் 486,228 பேர் கடற்படையிலும் 435,041 பேர் விமானப்படையிலும் பணிபுரிகின்றனர் 154,331 பேர் ஐரோப்பாவில் உள்ளனர். 45,413 பேர் ஜப்பானிலும் 36,921 பேர் கொரியாவிலும் பணியாற்றுகின்றனர்.

பனிப்போர் காலத்தில் அமெரிக்கப் படைப்பலம் 21 லட்சமாக உயர்ந்தது. இது படிப்படியாக குறைக்கப்பட்டுள்ளது.

றத்திற்கு அதிகாரம் வழங்கக் கூடிய ஓர் அரசியல் அமைப்பை கொண்டு வர இருப்பதாகவும் எனவே வாக்காளரின் ஒத்துழைப்பு இதற்கு தேவைப்படுவதாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மக்களின் நன்மைக்காக சுமார் நாற்பது பக்கங்களைக் கொண்ட தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் இதில் சிறுபான்மை பிரச்சினை தொடர்பாக தெளிவான கருத்து தெரிவிக்கப்படவில்லை என செய்தியாளர்கள் வினா எழுப்பியதாகவும் சிறுபான்மை மக்க

முதல்படிவம் அனுப்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தில் பெற்று அனுப்பமுடியுமென தெரிவிக்கப்பட்டது.

மேற்படி முதல்படிவம் யாழ் பல்கலைக்கழகத்தில் முடிவடைந்திருந்ததினால் பல விண்ணப்பதாரிகள் ஏமாற்றமடைந்தனர். ஆனால் தற்சமயம் படிவங்கள் யாழ்.பல்கலைக்கழகம் வந்து சேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

எனவே இப்படிவத்தினைப் பூர்த்தி செய்து அனுப்பாதோர் உடன் பூர்த்தி செய்து அனுப்புமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

## பொ. ஐ. மு - மு. காங்கிரஸ் ஒப்பந்தம் வெளியிடப்பட்டது

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணியும் முஸ்லிம் காங்கிரஸும் மேற்கொண்ட ஒப்பந்தத்தை பொது மக்களுக்கு வெளியிடப்பட்டுள்ளதாக அதன் பொதுச் செயலாளர் தி. மு. ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

மக்கள்மீது சில தீய சக்திகள் இவ் ஒப்பந்தம் தொடர்பாக விசமத்தனமான வதந்திகளை பரப்பி வருவதாகவும் இவ் வதந்திகளில் உண்மை இல்லை என்றும் எனவே பொது மக்கள் தெளிவு அடைவதற்காகவே இவ் ஒப்பந்தத்தை முழுமையாக வெளியிடுவதாகவும் தெரிவித்துள்ளார்.

## அலுவலகம் தீக்கிரை

(மாத்தளை)

மாத்தளை தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் ஒருவரது அலுவலகம் எதிரணியினரால் தீவைத்துக் கொளுத்தப்பட்டது.

கட்டடம் தீக்கிரையானதால் ஐந்து இலட்சம் ரூபா வரையான சேதம் ஏற்பட்டதாகவும் தெரியவருகின்றது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994. 07. 23-

சனி இரவு

08. 01 - அறிவியற் கலசம்
08. 10 - நிகழ்வும் பகிர்வும்
08. 25 - நேயர் கடிதங்கள்
08. 30 - செய்திகள்
08. 40 - சிறப்பு நிகழ்ச்சி ''வெற்றியின் பாதையில் லெப்ரினன்ட் செல்லக்கிளி அம்மான்''

1994. 07. 24

ஞாயிறு காலை

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - களத்தில் மலர்ந்தவை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

Wallar Branch Library

## பேராசிரியருக்கு மணி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறைத் தலைவர் பேராசிரியர் வ. ஆறுமுகம் அவர்களின் மணி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8. 30 மணியளவில் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழக கல்விக் கழகத்தினரால் எடுக்கப்படும் இம் மணி விழாவில் மணி விழா நூல் வெளியீடும் இடம் பெறவுள்ளது.

# ருவாண்டா அகதிகளில் 1000 பேர் தினமும் காலராவிற்கு பலி

ருவாண்டாவிலிருந்து வெளியேறி அகதிகளாக தங்கியுள்ளவர்களிடையே காலரா நோய் வேகமாகப் பரவிவருவதாகவும் இதனால் நாளாந்தம் ஆயிரம் பேர் வீதம் இறந்து வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ருவாண்டாவில் நடந்து வரும் யுத்தங்களினால் 5 லட்சத்திற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டதும் பல லட்சக்கணக்கானோர் அகதிகளாகியுள்ளதும் இவர்களை பாதுகாப்பதற்கென பிரெஞ்சு துருப்புகள் அங்கு நிலை கொண்டுள்ளதுடன் அகதிகளை பராமரித்து வருவதும் தெரிந்ததே.

தற்போது அகதிகளாகி வெளிநாடுகளின் எல்லைகளில் தங்கியுள்ள இவர்கள் காலரா நோய்க்கு அஞ்சி மீண்டும் ருவாண்டா திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதாக நிவாரணப் பணியாளர் அறிவிக்கின்றார்.

# 360 கோடி ரூபா ஆயுத தளபாடங்கள் சிறிலங்கா அரசினால் கொள்வனவு

(கொழும்பு)

1994-ம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குப்பின்னர் வடபகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையில் 360 கோடி ரூபாவிற்கு யுத்த தளபாட கொள்வனவு இடம் பெற்றுள்ளது எனவும்,

இவ் ஆயுததளபாட கொள்வனவு தொடர்பாக சிங்கப்பூர் நிறுவனமான சீ. எப். ஜீ யுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஆயுதங்கள் கொள்வனவு செய்வது தொடர்பாக சட்டத்தரணி தயா வெத்தசிங்க ரஷ்யா சென்றுள்ளார்.

சிறிலங்கா தூதுவராலயம் ஊடாக இவ் இராணுவத்தளபாடங்கள் கொளவனவு செய்ய ரஷ்ய அரசாங்கத்திற்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையே கொடுக்கல் வாங்கல் நடைபெற்றுள்ளது. இக் கொடுக்கல் வாங்கலின் போது அப்பணத்தில் 60 சதவீதம் மோசடி செய்யப்பட்டுள்ளது.

முப்படையையும் சேர்ந்த தளபதிகளும் ஏனைய பாதுகாப்புத்துறை அதிகாரிகளும் இவ் ஆயுதக் கொள்வனவை தடுத்த போதும் அதனை மீறி இக்கொள்வனவு இடம் பெற்றுள்ளது.

இக் கொள்வனவின் போது இராணுவத்தினருக்கு ஃ பி. எம். பி - 1 ரக வாகனம் - 60, ஃ பி எம். பி. -2 ரக வாகனம் -60, ஃ இராணுவடாங்கி-10, என்பனவும், கடற்படைக்கு ஃ ஆழம் குறைந்த கடற்பரப்பில் நடமாடும் 52 மீற்றர் நீளமான படகுகள் -10, ஃ கடற்பாதுகாப்பிற்குப் பயன்படுத்தவென அதிவேகப் படகுகள் -2

விமானப்படைக்கு, ஃ ஏ. எம். -3 ரக விமானம் -3, ஃ என். என் ஐ-மிக் ரக உலங்கு வானூர்தி - 8, ஃ 35 ரக உலங்கு வானூர்தி -3 என்பன கொள்வனவு செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

கொள்வனவின் போது கமிசனாகப் பெறப்பட்ட பணம் இம்முறை தேர்தலின் போது ஐ.தே.க செலவிடும் என ராவய பத்திரிகை கூறுகிறது.

## லெப்.செல்லக்கிளி அம்மான் 11-ம் ஆண்டு நினைவுநிகழ்வு

லெப்டினன்ட் செல்லக்கிளி அம்மானின் 11-ஆம் ஆண்டு நினைவு வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 7 30 மணிக்கு திருநெல்வேலி, சங்கீதா வீதி, வாலை அம்மன் சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

இதில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு நினைவுரையாற்றவுள்ளதுடன் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

★ ★ ★

லெப். செல்லக்கிளி அம்மானின் 11-ஆம் ஆண்டு நினைவு நாளில் இன்று காலை 9. 00 மணிக்கு திருநெல்வேலி தபால்பெட்டிச் சந்திக்கருகில் உள்ள அவரது தூபிக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வும், காலை 10 00 மணிக்கு கல்வியன் காட்டுச் சந்தியிலுள்ள செல்லக்கிளி அம்மான் நினைவாலயத்திலுள்ள திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தும் வைபவமும் இடம் பெறவுள்ளன.

## கஞ்சா உற்பத்தி செய்த பெண்ணுக்கு தண்டனை

கஞ்சா உற்பத்தியில் ஈடுபட்ட பெண் ஒருவரை வல்வெட்டித்துறை தமிழீழ காவல்துறையினர் கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

சட்டவிரோதமாக இச் செய்கையில் ஈடுபட்ட பெண்ணுக்கு பருத்தித்துறை நீதிமன்ற நீதியாளர் பிரதீபா குற்றப்பணமாக மூவாயிரம் ரூபா செலுத்துமாறு தீர்ப்பு வழங்கி இச் செய்கையில் ஈடுபட்ட பெண்ணை எச்சரிக்கை செய்துள்ளார். (யோ)

## மேடை சரிந்தமை குறித்து விசாரிக்க குழு நியமனம்

(கொழும்பு)

தேர்தல் பிரசார கூட்டத்தின்போது ஜனாதிபதி இருந்த மேடை சரிந்து விழுந்தது தொடர்பாக பூரண விசாரணை நடத்த குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

சப்பிரகமுவ மாகாண பொலிஸ் அத்தியட்சகர் கபூர் தலைமையில் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

## உரியவர் பெறவும்

(வடமராட்சி)

கடந்த 20ஆம் திகதி 'நரோமா' கப்பல் மூலம் பயணம் செய்த பயணி ஒருவரின் உடுப்புப் பொதி கண்டெடுக்கப்பட்டு பருத்தித்துறை துறைமுகச் செயலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரங்களைக் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்

## கம்பன் விழாவில் இன்று சுழலும் சொற்போர்

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழாவின் நான்காம் நாளான இன்று காலை 9.30 மணிக்கு ''சுழலும் சொற்போர்' நிகழ்ச்சியும், மாலை 4. 30 மணிக்கு மங்கள இசை, இளைஞர் அரங்கு, தேர்வு நேர்காணற் கவியரங்கு என்பன இடம்பெறவுள்ளன.

இந் நிகழ்ச்சிகள் நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள விழாப்பந்தலில் இடம் பெறவுள்ளன.



## 11-ம் ஆண்டு நினைவாக

மண்ணில் 2( 06-1953

மண்ணின் விடிவிற்காக 23-7-1983

**லெப். செல்லக்கிளி அம்மான்**

**(சதாசிவம் செல்வநாயகம், கல்வியங்காடு)**

இலட்சிய வேங்கைகள் இறப்பதுமில்லை
விடுதலைப் புலிகள் வீழ்வதுமில்லை.

வாலை அம்மன் ச. ச. நிலையம்.
இராமலிங்கம் வீதி.
திருநெல்வேலி கிழக்கு.

வாலை அம்மன்
விளையாட்டுக் கழகத்தினர்
(8911)

## திங்கட்கிழமைகளில் மாரடைப்பு வருவது அதிகம்

வேலை பார்க்கும் தொழிலாளர்களில், மாரடைப்பு நோயினால்பாதிக்கப்படுபவர்களில் 33 சதவீதத்துக்கும் அதிகமானோர் திங்கட்கிழமைகளிலேயே தாக்கப்படுவதாக அமெரிக்க மருத்துவ சஞ்சிகையொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

வழமையான வேலை நாட்களில் வேலை வாரத்தின் முதல் நாளின் காலையிலேயே இவ்விதம் தாக்கம் ஏற்படுவதாகவும் அது தெரிவித்துள்ளது.

உடல், உளரீதியான ஓய்வு திங்கட்கிழமை காலையில் மாற்றப்படுவதும், வேலை தொடக்க நாளின் உணவு மாற்றமும் இவ்விதம் தாக்கத்தை கொண்டுவருவதாக அச்சஞ்சிகையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தென்னிலங்கை

...கள் நம்புகின்றன. இதனால் பிரசாரக் கூட்டம் நடத்தும் அனைத்துக் கட்சிகளுக்கும் பூரண பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படும் என பொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ளார்.

சிறிலங்காவில் கடந்த காலங்களில் இடம்பெற்ற தேர்தல் வன்முறைகளுக்கு சிறிலங்கா பொலிசார் துணை நின்றது குறிப்பிடத்தக்கது கொலைப் பயமுறுத்தல்கள், தீவைத்தல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் தடுப்புக் காவலில் வைக்கப்படுவர் என்றும் இன வாதத்தைத் தூண்டும் விதத்தில் துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்போர் வீண் வதந்திகளைப் பரப்புவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ளார்.

## அரசாங்கத்திற்கு எதிராக வைத்தியர் போர்க்கொடி

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலை வைத்தியர்களின் நியாயமான கோரிக்கைக்கு அரசாங்கம் உடனடியான நடவடிக்கை எடுக்க தவறினால் தமது தொழிற் சங்கம் உடனடியாக வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அரசாங்க வைத்தியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் முதற் கட்டமாக கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் நாளை மறுதினம் திங்கட்கிழமை வேலை நிறுத்தத்தில் ஈடுபட இருப்பதாகவும் இதன் பின்னர் களுபோவில, றாகம போன்ற வைத்தியசாலைகளுக்கு விரிவுபடுத்தப்போவதாகவும் இதனை அரசாங்கம் உதாசீனம் செய்தால் நாடு முழுவதற்கும் தமது வேலை நிறுத்தத்தை மேலும் விரிவுபடுத்தப்போவதாக தெரிவித்துள்ளது.

## புத்தக கண்காட்சி

(வடமராட்சி)

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை மண்டபத்தில் ஸ்ரீராமகிருஷ்ண விவேகானந்த புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் இன்று காலை 8 30 மணிக்கு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும். இப்புத்தகக் கண்காட்சியை யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் திறந்து வைப்பார். சுவாமி சிற்ரூபானந்தா, பல்கலைக்கழக உபவேந்தர் திரு. க. குணரத்தினம் அவர்களிடம் இந்துநாகரிகத்துறைக்கு நூல்கள் அன்பளிப்பு செய்து வைப்பார். (யோ)

## விவசாய பாசறை

வடதமிழீழ விவசாய விஸ்தரிப்பு வேலைத்திட்டங்களை ஒழுங்கமைத்து தமிழீழத்தின் விவசாயக்கொள்கைகளை அமுல்படுத்தும் விவசாய போதனாசிரியர்களுக்கான பயிற்சிப்பாசறை ஒன்று அண்மையில் கிளிநொச்சியில் நடை...

## தமிழ்க்

...யில் அனைத்துக் கட்சிகளும் தீவிர கவனம் செலுத்தி வருகின்றன

இதன் காரணமாக இவர்கள் தங்கியிருக்கும் இடங்களுக்குச் செல்லும் வேட்பாளர்களும் அவர்களது ஆதரவாளர்...

## அதிகாரப்

இல்லாதொழிக்கப்படும்.

அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு **பிற்போடல்**

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தினரால் 23-07-94 இன்று அதிர்ஷ்டம் பார்க்க உள்ள சீட்டிழுப்பானது 14-08-94 (ஞாயிறு) அன்று வரை பிற்போடப்பட்டுள்ளது.

நன்றி

-நிர்வாகசபை

(8910)

## 3ஆம் ஆண்டு நினைவாக

## 3ஆம் ஆண்டு நினைவாக



**கப்டன் பாண்டியன் (புரூஸ்லி)**
(துரைசிங்கம் கிருஸ்ணகுமார்)
[யா/பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி
க. பொ. த. (சாதாரண தர) பழைய மாணவன்]

பிறப்பு: 9-7-1972
வீரச்சாவு: 23-7-1991

தமிழீழ தாகத்துடன் தளராத உறுதியுடன்
தலைவனின் வழிகாட்டலில்
தளராது களமாடிய பாண்டியனே
தவழ்கிறது உன்முகம் எம் நெஞ்சில்.

- குடும்பத்தினர்

வடலியடைப்பு
பண்டத்தரிப்பு

(8907)



இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


அதிகாரப்

இல்லாதொழிக்கப்படும். அமைச்சரவையின் ஆணையின் பேரில் செயற்படும் சம்பிரதாயபூர்வமான அரசத் தலைவர் பதவி ஒன்று உருவாக்கப்படும். பாராளுமன்றத்தின் ஐம்பது சதவீத ஆசனங்கள் விகிதாசாரமுறையிலும் ஏனைய ஐம்பது சதவீத ஆசனங்கள் தொகுதிவாரி முறையிலும் நிரப்பப்படும் அரசியல்மைப்பு மன்றம் ஒன்று அமைக்கப்பட்டு அரசியலமைப்பு விவகாரங்கள் கணிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்

போது அதில் கலந்து கொள்ளும் சகல பேச்சாளர்களினதும் பெயர்கள் அடங்கிய விபரங்களை ஆகக் குறைந்தது எழுபத்தியிரண்டு மணி நேரத்திற்கு முன்னர் அப்பகுதி பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் அதனை தொடர்ந்து விசேட தேர்தல் பொலிஸ் பிரிவுக்கு அறிவிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் பணித்துள்ளார்.


யாழ். ஸ்ரீதரில்

தினசரி 4.00 மணி

**உயிராயுதம்**

தினசரி 6.00 மணி
சனி, ஞாயிறு 10.30,
6.00 மணி

JURASSIC PARK

(சி-9950)


போதனாசிரியர்களுக்கான பயிற்சிப்பாசறை ஒன்று அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்றது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரும் விவசாயதிணைக்களத்தின் விரிவாக்கப் பகுதியினரும், யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தினரும் இணைந்து நடாத்திய இப் பயிற்சிப்பாசறையில் வன்னி மற்றும் யாழ். மாவட்டங்களில் கடமையாற்றும் விவசாய போதனாசிரியர்கள், விவசாய உத்தியோகஸ்தர்கள், உதவி விவசாய அலுவலர்கள் ஆகியோர்பங்குபற்றினர்.

இப் பயிற்சிப்பாசறையின் போது ஒவ்வொரு விவசாய போதனாசிரியரும் தங்கள் பகுதிகளுக்கான வேலைத் திட்டங்களை பயிர் செய்கை காலரீதியாகவும், மாதரீதியாகவும் கிழமை ரீதியாகவும் தயாரித்து முன் கூட்டியே திட்டமிட்டு செயற்படுத்த வேண்டியதற்கான பயிற்சியும் வழங்கப்பட்டன இதன் மூலம் எதிர்காலத்தில் விவசாயத்துறையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி விவசாயக்காரர்கள் பயனடையவுள்ளனர்.

## திருவிழா

(குருநகர்)

சில்லாலை மேற்கு புனித யாகப்பர் தேவாலயத் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணிக்கு நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று சனிக்கிழமை பிற்பகல் 4.30மணிக்கு நற்கருணை ஆராதனை-ஆசீர்வாதம் என்பன நடைபெறும்.

நாளை ஞாயிறு காலை 7.15 மணிக்கு பங்குத் தந்தை அருட்திரு. அ. பெ. பெனற் அடிகள் தலைமையில் திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுத்ததைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி ஆரம்பமாகும். (21)

கள் தங்கியிருக்கும் இடங்களுக்குச் செல்லும் வேட்பாளர்களும் அவர்களது ஆதரவாளர்களும் வாக்குகளைத் தமக்கே இடவேண்டும் என மிரட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. தமிழ்க் குழுக்கள் தனித்தனிக்குழுக்களாகச் சென்று தமக்கே வாக்களிக்க வேண்டும் எனவும் தவறின் பாரதூரமான விளைவுகளை சந்திக்க நேரிடும் எனவும் மிரட்டுகின்றனராம்.

இதனால் அச்சமடைந்த தமிழர்கள் பெருமளவில் அங்கிருந்து வெளியேறி யாழ்ப்பாணம் நோக்கி வருவதாக கிடைக்கும் செய்திகள் சில தெரிவிக்கின்றன.

பொதுத்

கிய முன்னணியின் பொதுச் செயலாளர் தி. மு. ஜெயரட்ண நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொறுப்பற்ற முறையில் கருத்துக்களை வெளியிடக் கூடாது என்றும், பொறுப்பற்ற விதத்தில் மக்கள் மத்தியில் கருந்துக்களை வெளியிடக் கூடாது என்றும், சமாதானமான, சகஜமான தேர்தல் ஒன்றுக்கு அவர் வழி வகுக்க வேண்டும் எனவும் அக்கடிதத்தில் கேட்டுள்ளார்.

போதிய

தடவை கோரிக்கை விடுத்த போதிலும் இதுவரை போதிய பாதுகாப்பு வழங்க அரசு முயலவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் வாக்களிப்பு

என இனம் காணுவது கடினமாக இருப்பதால் பொலிஸ் பாதுகாப்பை வாக்களிப்பு நிலையங்களில் இருந்து முற்றாக விலக்கிக்கொள்ள வேண்டும் எனவும் மேலும் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.


(8910)

★ விக்ரர் ஸ்தாபனத்தாரின்
புதிய வெளியீடு
யுரசிக் பாக் (Jurassic Park)
அறிவியல் சார்ந்த திகில் படம்
படப்பிரதிகள் விற்பனையாகின்றது

★ உங்கள் சகல விதமான ரான்ஸ்போமர்களும்
ரீ வைண்டிங் செய்து கொடுக்கப்படும்.

**விக்ரர்**

இல. 5 தேவா வீதி,
(எழிலகம் அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

(8895)



சாளரம் மூன்றாம் ஆண்டு நிறைவு

**சிறப்பிதழ் வெளியீட்டு நிகழ்வு**

சாளரம் இளையோர் திங்களிதழ் தனது மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி அதிக பக்கங்களுடன் சிறப்பிதழாக வெளிவருகின்றது.

**சிறப்பிதழ் வெளியீட்டு நிகழ்வு**
**24-ம் திகதி ஞாயிறு காலை**
**9.30 மணிக்கு**

யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி
மண்டபத்தில் நடைபெறும்

வாசகர்கள், மாணவர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சாளரம்
வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

(8905)